சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **310 / 2020**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **22.07.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சுஷ்மிதா@சுஷ்மித்ரா | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல் தகவல் அறிக்கை கணினி நகல் - ம.சா.ஆ.1

2) விடுவிப்பு சான்று நகல் - ம.சா.ஆ.2

3) மருத்துவ பில்கள் (ரூ.2,537/-) - ம.சா.ஆ-3. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்து நடைபெற்ற சாலையானது தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். என்மீது மோதியதாக கூறக்கூடிய வாகனமானது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்தது. மேற்படி சாலையானது தென்வடல் சாலையாகும். மேற்படி தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வரும் வாகனங்கள் மேற்படி சாலையில் மேற்கு பகுதியில் வரும் என்றால் சரிதான். நான் மேற்படி சாலையில் மண் ரோட்டில் நின்றபொழுது தான் விபத்து ஏற்பட்டது. விபத்து தார் சாலையில் தான் நடைபெற்றது. மேற்படி விபத்து சம்மந்தமாக காவல்துறையினர் பதிவு செய்த மாதிரி வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் அவை எனக்கு எதிராவிடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்படி சாலையை கவனகுறைவாக கடக்க முயன்றதால் தான் மேற்படி விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு நான் தான் காரணம், முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மீது எவ்வித தவறும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயம் தான் அது பூரணமாக குணமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்தினால் எந்தவித இழப்பும், ஊனமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யவில்லை என்று

சொன்னால் சரிதான். எனக்கு சொற்ப காயம் என்பதால் தான் அறுவை சிகிச்சை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2,3 பொய்யானவை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் Fitness certificate நடைமுறையில் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு இல்லாமல் வாகனத்தை இயக்கியது காப்பீடு விதிமுறை மீறல் என்றால் சரியல்ல. எனவே, எனக்கு இழப்பீடு எதுவும் கொடுக்கவேண்டும் என்றால் இரண்டாவது எதிர்மனுதாரர் கொடுக்கவேண்டியது இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.